வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com

மலர் : 06 | 04.10.2025 சனிக்கிழமை | இதழ் : 277 | பக்கங்கள் : 08




# புதிய ஒரு சட்டம் வரும்வரை பயங்கரவாத சட்டம் அமுலில்!

## கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர்

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 04

**புதிய ஒரு சட்டம் அமுலுக்கு வரும் வரை பயங்கரவாத தடைச் சட்டம் நடைமுறையில் இருக்கும் எனக் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.**



நேற்று சங்கானையில் நிகழ்வு ஒன்றின் பின்னர் ஊடகவியலாளர் ஒருவர், "செப்ரெம்பர் மாதம் பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படும் என அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். ஆனால் தற்போது ஒக்ரோபர் மாதம் ஆரம்பித்துள்ளது. பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவது தொடர்பாக தங்களது அரசின் நிலைப்பாடு என்ன?" எனக் கேள்வி எழுப்பினார்.

இந்தக் கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படும் என நாங்கள் எமது கொள்கைப் பிரகடனத்தில் கூறி இருந்தோம். அது நீக்கப்படவேண்டிய ஒரு சட்டம். இந்த சட்டத்தினால் அனைவரையும் விட எமது கட்சி கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த சட்ட மூலத்தை மாற்ற

07



## கஜேந்திரகுமார் - திருமுருகன் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஒக். 04

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவரும் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உப தலைவரும் ஆன்மீகத் தலைவருமான கலாநிதி ஆறு திருமுருகனைச் சந்தித்து கலந்துரையாடினார்.

அநுர அரசாங்கம் மிகவிரைவில் கொண்டுவரவுள்ள ஏக்கிய இராச்சிய (ஒற்றையாட்சி) அரசியல் யாப்பினுடைய ஆபத்துக்கள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

தெல்லிப்பழை துர்க்கையம்மன் வளாகத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது. இச்சந்திப்பில்

07

# அரசியல் கலப்பற்ற நினைவேந்தல் கட்டமைப்பை உருவாக்கவேண்டும்!

## தமிழரசுக் கட்சித் தலைவர் கோரிக்கை

- த.பிரதீபன் -



யாழ்ப்பாணம், ஒக். 04

தியாக தீபம் திலீபனின் தியாகத்தில் அரசியல் செய்யவேண்டாம் என கட்சிகளிடம் அமைப்புக்களிடம் கோரிக்கை முன்வைத்த இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், பொருத்தமான அரசியல் கலப்பற்ற நினைவேந்தல் கட்டமைப்பை உருவாக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று அழைப்பு விடுத்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று ஊடக சந்திப்பை நடத்தியபோதே அவர் இதனை தெரிவித்தார்.

07

# மனித உரிமை மீறலில் ஈடுபட்டவர்களுக்கு சர்வதேச தடைகள் விதிக்கப்படவேண்டும்!

## ஜெனீவாவில் சிறீதரன் வலியுறுத்தல்



ஜெனீவா, ஒக். 04

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கான நீதியை பெற்றுக்கொள்வதற்கு, ஒரு நாட்டுக்கே உரிய சிறப்பு அறிக்கையாளர், நியமிக்கப்படவேண்டுமென இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜெனீவாவில் இடம்பெற்றுவரும்

07

# மாகாணசபை தேர்தலை உடனடியாக நடத்துங்கள்!

## ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை

கொழும்பு, ஒக். 04

மாகாணசபைத் தேர்தலை உடனடியாக நடத்துமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்துமபண்டார தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததிலிருந்து

07

# யாழ்தேவி சேவையில் தாமதம்!

கொழும்பு, ஒக். 04

கொழும்பு கோட்டை மற்றும் காங்கேசன்துறைக்கு இடையிலான யாழ்தேவி தொடருந்தின் போக்குவரத்து இரண்டு மார்க்கங்களிலும் தாமதமாகும் என தொடருந்து திணைக்களம் அறிவித்துள்ளது.

வவுனியா மற்றும் ஓமந்தைக்கு இடையிலான தொடருந்து மார்க்கத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அத்தியாவசிய திருத்தப்பணிகள் காரணமாக, யாழ்தேவி தொடருந்தின் போக்குவரத்து தாமதமடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, எதிர்வரும் 7 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை குறித்த மார்க்கத்தில் சேவையில்

07

# இலங்கையின் சீர்திருத்தம் நாணய நிதியம் பாராட்டு!

கொழும்பு, ஒக். 04

இலங்கையின் விரிவான பொருளாதார சீர்திருத்தத் திட்டம் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டுகிறது. இது நெருக்கடிக்குப் பிந்தைய வலுவான மீட்சியையும் மேம்பட்ட நிதி ஆரோக்கியத்தையும் எடுத்துக் காட்டுகின்றது என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

நேற்று முன் தினம் வியாழக்கிழமை நடைபெற்ற நாணய நிதியத்தின் ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய அதன் தகவல் தொடர்பு

07

# அர்ச்சுனா எம்.பியும் சிறைசெல்ல நேரிடும்!

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஒக். 04

தற்போது அச்சுனா எம்.பி. ஐஸ்லாந்து ஜனாதிபதி நாமலின் தலைமையின் கீழ் சுகாதார அமைச்சராக இருந்து கொண்டு எவ்வாறு பணம் சம்பாதிப்பது என்று கற்பனை காண்கிறார். ஆகவே அர்ச்சுனா இராமநாதனும் விரைவில் சிறை செல்ல நேரிடும் என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்

07

# மாகாண தேர்தல் வேண்டுமானால் புதிய எல்லை நிர்ணயம் அவசியம்!

## தேர்தல்கள் ஆணைக்குழு வலியுறுத்து

கொழும்பு, ஒக். 04

புதிய எல்லை நிர்ணய செயல்முறைக்குப் பின்னர், மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டுமானால், எல்லை நிர்ணயப்பணிகளை விரைவில் ஆரம்பிப்பது வரவேற்கத்தக்கது என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

புதிய எல்லை நிர்ணயம் மேற்கொள்ளப்பட்டால், அதற்கு சுமார் ஒரு வருட காலம் தேவைப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க குறிப்பிட்டார்.

07

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழுக்கத்திற்கு பெயர் போன யாழ்ப்பாணம் இன்று தலைகீழாக மாறி சீரழிந்து போகிறது!

## சிறீ பவானந்தராஜா எம்.பி. கவலை



யாழ்ப்பாணம், ஒக். 04

கல்வி, ஒழுக்கம், நேர்மை, கண்ணியம், உழைப்பு போன்றவற்றுக்கு யாழ்ப்பாண மக்கள் ஒரு காலத்தில் பெயர் போனவர்கள். ஆனால் கடந்த ஆட்சிகளில் ஏற்பட்ட போதைப்பழக்கம், தொலைபேசிப் பாவனை காரணமாக இளைஞர்கள் திசை மாறி சீரழிந்து கொண்டிருக்கின்றனர். எனவே அவர்களை ஒரு நல்ல நிலைமைக்கு கொண்டு வர வேண்டிய பொறுப்பு எங்களுக்கு உள்ளது என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சிறீ பவானந்தராஜா தெரிவித்துள்ளார்.

சங்கானை வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நடைபெற்ற நல்லொழுக்க தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

சமூக மாற்றங்கள் எவ்வாறு ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன என்று அனைவருக்கும் தெரியும். ஒழுக்கமின்மையே இதற்கெல்லாம் காரணம். ஒழுக்கமானது குடும்பத்தில் ஆரம்பித்து, பின்னர் கிராமத்துக்கு பரப்பப்பட்டு, அது நாடு நோக்கி நகர வேண்டும். பழைய அரசாங்கங்களின் செயற்பாடுகளால் அவை தலை மாறி போயிருக்கின்றன.


கடந்த கால அரசாங்கத்தில் மதுபானச்சாலை அனுமதிப் பத்திரங்களை அரசியல்வாதிகள் பெற்று கிளிநொச்சியிலும் சரி யாழ்ப்பாணத்திலும் சரி மதுபானச்சாலைகளை திறந்து இருக்கின்றார்கள். சாப்பாட்டுக் கடைகளை விட மதுபானச்சாலைகளே அதிகமாக இருக்கின்றன.

பெரிய ஒரு அரசியல் கட்சியின் ஆதாரவாளர்கள் ஒரு போதைப்பொருள் தொழிற்சாலையையே உருவாக்கும் அளவுக்கு போதைப் பொருட்களை கொண்டு வந்து தெற்கில் வைத்திருக்கின்றார்கள். இதனைக் கடந்த அரசாங்கங்கள் கண்டும் காணாமல் தான் விட்டிருந்தன. ஆனால் எமது ஜனாதிபதி இதற்கு தகுந்த நடவடிக்கை எடுத்து அனைவரையும் கைது செய்துள்ளார்.

இவ்வாறானவர்கள் உண்மையிலேயே 15-20 வருடங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டிருக்கவேண்டும். இவ்வாறு கைது செய்யாமையால்தான் அவர்கள் போதைப் பொருட்களை வீடு வீடாக விநியோகிக்கும் அளவுக்கு திறமை பெற்றிருக்கின்றார்கள். ஒரு அரசாங்கத்துக்கு நிழல் அரசாங்கமாக செயல்படும் அளவுக்கு அவர்கள் போதைப்பொருள் வியாபாரத்தில் கொடி கட்டிப் பறந்தார்கள்.

எனவே அவர்களை அடக்குவது எமது அரசாங்கத்தின் கடமை. அதனை நாங்கள் செய்வோம் - என்றார். (அ-05)

# வவுனியா மாவட்டத்தில் பெரும்போக நெற்செய்கை



வவுனியா, ஒக். 04

வவுனியா மாவட்டத்தில் பெரும் போக நெற் செய்கை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் க.விமலரூபன் தெரிவித்தார்.

இம்முறை மாவட்டத்தில் 25,425.37 ஹெக்ரேயர் நெற்செய்கை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. அத்தோடு வவுனியா மாவட்டத்தில் உள்ள 12 கமநல சேவை மையங்களும் விவசாயிகளுக்கு தேவையான வசதிகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை வவுனியா மாவட்டத்தில் இம்மாதம் நெல் விதைப்பு நடவடிக்கைகளை முன்கூட்டியே மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ-10)

# இயக்கச்சியில் குண்டுகள்!

கிளிநொச்சி, ஒக். 04

கிளிநொச்சி - இயக்கச்சியில் உள்ள தனியார் காணியில் வெடிக்காத நிலையில் குண்டுகள் நேற்று கண்டுபிடிக்கப்பட்டன.

இயக்கச்சி பகுதியை சேர்ந்த ஒருவர் தன்னுடைய காணியில் துப்புரவுப் பணியை மேற்கொண்டிருந்தபோது குறித்த காணிக்குள் குண்டுகள் காணப்படுவதை அவதானித்தார்.

சம்பவம் குறித்து உடனடியாக பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்ட போது சம்பவ இடத்துக்கு உடனடியாக மருதங்கேணி பொலிஸார் விரைந்து சென்று பாதுகாப்பைப் பலப்படுத்தினர்.

இன்று நீதிமன்ற அனுமதியின் பின் மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-02-03-05)

# சர்வதேச நல்லொழுக்க தினத்தை முன்னிட்டு உலருணவுப் பொதிகள் வழங்கிய அமைச்சர்!


யாழ்ப்பாணம், ஒக். 04

சர்வதேச நல்லொழுக்க தினம் நேற்று கடைப்பிடிக்கப்பட்டது. வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நேற்று சர்வதேச நல்லொழுக்க தினம் கடைப்பிடிக்கப்பட்டது.

சங்கானையில் உள்ள அவர்களது அலுவலகத்தில் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் தலைவர் புஸ்பராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் விருந்தினர்களாக கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன், பாராளுமன்ற உறுப்பினர் சிறீ பவானந்தராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட



தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. (அ-05)

# அரியாலையில் குப்பைமேடு; எதிர்த்து ஒக்.8 போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 04

அரியாலையில் குப்பை மேடு அமைக்கும் நல்லூர் பிரதேச சபையின் திட்டத்துக்கு அந்த ஊர் மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். தமது எதிர்ப்பைப் பதிவு செய்யும் விதமாக எதிர்வரும் 8ஆம் திகதி ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவும் அவர்கள் முடிவு செய்துள்ளனர்.

இது தொடர்பில், அந்த ஊர் மக்களும் அந்த ஊரைச் சேர்ந்த புலம்பெயர் மக்களும் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு,

உலகமெங்கும் சுற்றுச் சூழல் பாதுகாப்புக்காக மக்கள் போராடி வருகின்றனர். அரியாலையூர் மக்களாகிய நாமும் நமது ஊரைப் பாதுகாப்பதற்காக நமது அழகிய ஊரின் நிலம், கடல், நீர்வளம், தூய காற்று போன்ற இயற்கையின் கொடைகளை காப்பாற்றுவதற்காகப் போராட வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

நல்லூர் பிரதேச சபை, எமது ஊர்மக்களுடன் எந்தவகையிலும் கலந்து பேசாது சூழலை மாசுபடுத்தக்கூடிய குப்பைகளை எமது ஊரில் வீசும் திட்டத்தை ஆரம்பித்திருப்பது எமது ஊர் மக்களால் மட்டுமல்ல இயற்கையையும் மனிதத்தையும் நேசிக்கும் எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாத அநீதியாகும். இயற்கைப் பசளை உற்பத்தி என்ற பெயரில் ஏமாற்றுத்தளமாக எந்த வகையிலும் வகைப்படுத்தப்படாத - மக்காத குப்பைகளை எமது ஊரில் கொட்டி எமது ஊரை குப்பைமேடாக மாற்றும் முயற்சியை நல்லூர் பிரதேச சபை உடனடியாகக் கைவிட வேண்டும்.

எமது இயற்கை வளங்கள் இன்றைய தலைமுறையான எமக்கு மட்டுமானதல்ல, எதிர்கால தலைமறைக்கும் சொந்தமானவையாகும். எமது ஊரின் இயற்கை வளங்களைப் பாதுகாத்து எதிர்கால சந்ததியிடம் ஒப்படைக்கவேண்டிய பொறுப்பு நமது தலைமுறைக்கு உண்டு. இதனால் மக்களுக்கும் இயற்கைக்கும் விரோதமான குப்பைமேட்டுத் திட்டத்தைக் கண்டித்தும் அதனைக் கைவிடக் கோரியும் வரும் 8 திகதி மக்கள் அணிதிரள வேண்டும் எனக் கோருகிறோம் - என்றுள்ளது.

(ஐ)

# கலாசார ஊர்வலத்துடன் ஆரம்பமானது யாழ். மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா!









யாழ்ப்பாணம், ஒக். 04

யாழ்ப்பாணம் மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட பண்பாட்டுப் பேரவைத் தலைவருமான திரு.மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

பி. ப. 01.00 மணிக்கு யாழ். புனித யுவானியார் தேவாலய முன்றலில் இருந்து கலாசார ஊர்வலம் ஆரம்பமாகி பி. ப. 01.30 மணிக்கு மாவட்ட செயலகத்தை வந்தடைந்ததைத் தொடர்ந்து மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் பண்பாட்டு பெரு விழா ஆரம்பமானது.

இதன்போது பல்வேறு கலாசார நிகழ்வுகள், சாதனையாளர் கௌரவிப்புகள் இடம்பெற்றன. (அ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
04.10.2025 சனிக்கிழமை
விசுவாவசு வருடம், புரட்டாதி 17

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தேசிய மக்கள் சக்தியின் பிரச்னை

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தொடர்பில் தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் நம்பிக்கை வைத்திருந்தனர். இதன் காரணமாகவே வரலாற்றில் முதல் முறையாக ஒரு தென்னிலங்கை கட்சிக்கு வாக்களித்தனர். அநுர குமார திஸநாயக்க தொடர்பிலான அரசியல் அலையே இதற்கான காரணம் என்று கூறப்படுவது முற்றிலும் சரியான பார்வையல்ல.

ஏனெனில், அதுவரையில் தமிழ்த் தேசிய அரசியலால் ஆட்கொள்ளப்பட்டிருந்தவர்கள் திடீரென்று ஓர் அலையின் பக்கமாக அள்ளுண்டு சென்றார்கள் என்பது சரியான பார்வையாக இருக்க முடியாது. தமிழ் கட்சிகள் பதவி, கட்சியென்று தங்களுக்குள் மோதிக் கொண்டிருந்ததும் அதேவேளை பொய்யான வாக்குறுதிகளை வழங்கிக் கொண்டிருந்த நிலையிலுமே அதிருப்தியுற்ற தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்தியின் பக்கமாக சாய்ந்தனர்.

அதேவேளை, தேசியளவில் ஏற்பட்ட மாற்றம் தொடர்பான அரசியல் விருப்பம் தமிழ் மக்களையும் கணிசமான அளவில் பாதித்திருந்தது. வெறும் தேர்தல் கோஷங்களுக்கு பழக்கப்பட்டிருந்த தமிழ் மக்கள் சற்று மாறுபட்ட பிரசாரங்களை செவிமடுப்பதில் ஆர்வம் காண்பித்தனர்.

ஆனால், தேசிய மக்கள் சக்தி அதன் கடந்த கால அரசியல் சுலோகங்களால் முன்நகர்வதில் சிக்கல்களை எதிர்கொண்டிருக்கின்றது. இன்று மன்னாரில் இடம்பெறும் காற்றாலைத் திட்டத்திற்கு எதிரான நடவடிக்கைகளும் அது தொடர்பில் அரசாங்கத்தின் அணுகுமுறையும் இதற்கு சிறந்த உதாரணமாக நோக்கலாம். தாங்கள் ஆட்சிக்கு வந்தால் காற்றாலை திட்டத்தை நிறுத்துவோம் என்று ஜனாதிபதி தேர்தல் பிரசாரங்களின் போது குறிப்பிட்டிருந்தார்.

அந்த வாக்குறுதியே இப்போது அவர்களுக்கு எதிராக திரும்பியிருக்கின்றது. திருகோணமலையில் முத்துநகர் என்னுமிடத்தில் வாழும் முஸ்லிம்கள் மத்தியில் கடந்த காலத்தில் உங்களின் இடங்களை இந்தியாவிற்கு வழங்கப் போகின்றார்கள் என்று பிரசாரம் செய்ததில் உள்ளூர் ஜே.வி.பியினருக்கு பங்குண்டு. அதிகாரமில்லாத போது, அப்போதைய ஆட்சியாளர்களை எதிர்ப்பதற்காக பல கதைகளை கூறியதில் ஜே.பி.விக்கு பிரதான பங்குண்டு. அவ்வாறான எதிர்ப்பு அரசியலே தற்போது அவர்கள் ஆட்சியில் இருக்கின்றபோது, ஆட்சியை கொண்டு நகர்த்துவதில் பெரும் நெருக்கடியாக மாறியிருக்கின்றது.

இலங்கையின் அனைத்து வகை அரசியல் தரப்புகளும், அவர்கள் பெரும்பான்மையாக இருக்கலாம் அல்லது சிறுபான்மையாக இருக்கலாம் - ஆனால், அனைவருமே தேர்தல் அரசியலுக்காக சில சுலோகங்களை உயர்த்திப் பிடிப்பது உண்டு. ஆனால், அவர்கள் அதிகாரத்திற்கு வந்த பின்னர் எதையெல்லாம் எதிர்த்தார்களோ அதனைச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகும் போது, தடுமாற நேரிடுகின்றது. அரசியல் என்பது தேர்தல் காலத்தில் பேசுவது போன்று வெறும் வார்த்தை விளையாட்டு அல்ல - மாறாக நிஜத்தில் அது கத்தியின் மேல் நடப்பது - சறுக்கினால் கத்தி குத்திக் கிழித்துவிடும். ஜே.வி.பின் கடந்த கால அரசியல் சுலோகங்கள் அவர்களுக்கு பல்வேறு இடங்களில் தடைக்கற்களாவும் பெரும் நெருக்கடியாகவும் மாறியிருக்கின்றது.

### மன்னார் தீவில் தேவைப்படுவது படைபலம் அல்ல, கலந்தாலோசனையே

## பேச்சு மூலம் தீர்வைக் காண அரசாங்கத்திடம் தேசிய சமதானப் பேரவை வேண்டுகோள்

ஶ්‍රී ලංකා ජාතික සාම මණ්ඩලය
இலங்கை தேசிய சமாதானப் பேரவை
National Peace Council of Sri Lanka

மன்னார் தீவில் மின்உற்பத்திக்கான காற்றாலைகளை நிறுவும் திட்டம் தொடர்பாக மூண்டிருக்கும் குழப்பநிலைக்கு படைபலத்தை பயன்படுத்தாமல் பேச்சு வார்த்தை மூலம் தீர்வைக் காண்பதில் நாட்டம் காட்டுமாறு அரசாங்கத்திடம் தேசிய சமாதானப் பேரவை வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

இது தொடர்பாக பேரவை வெளியிட்டிருக்கும் ஊடக அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது :-

மன்னார் தீவில் மின்சார உற்பத்திக்கான காற்றாலைகளை நிறுவுவது தொடர்பாக நீண்ட நாட்களாக நிலவிவரும் சர்ச்சை மக்களின் ஆர்ப்பாட்டங்களையும் ஹர்த்தால் போராட்டத்தையும் அடுத்து மேலும் தீவிரமடைந்திருக்கிறது. காற்றாலைகளை நிறுவுவதற்கான உத்தேச இடத்திற்கு வாகனங்களில் இயந்திரங்கள் கொண்டு செல்லப்படுவதை தடுப்பதற்கு வீதியின் நடுவில் அமர்ந்திருந்த கத்தோலிக்க மதகுருமார்கள் மற்றும் பெண்கள் உட்பட மக்களை பொலிசார் பலவந்தமாக அப்புறப்படுத்தியதை தொடர்ந்து ஏற்பட்டிருக்கும் இந்த நிலைவரம் குறித்து தேசிய சமாதானப் பேரவை அதன் கவலையை வெளிப்படுத்துகிறது.

பொலிசார் மேற்கொண்ட நடவடிக்கை பிரச்சினையில் சம்பந்தப்பட்ட தரப்புகளிடையில் முரண்பாடுகள் மேலும் அதிகரிபதற்கு வழிவகுத்திருக்கிறது.

அரசாங்கம் எடுத்த நடவடிக்கையை போராட்டக்காரர்கள் நம்பிக்கையை தகர்த்த ஒரு செயலாக நோக்குகிறார்கள். மக்கள் எதிர்க்கும் எந்த திட்டத்தையும் முன்னெடுக்கப்போவ தில்லை என்று ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க தேர்தல் பிரசாரங்களின்போது மக்களுக்கு உறுதியளித்தார். குறிப்பாக, இந்தியாவின் அதானி குழுமம் நிறுவுவதற்கு திட்டமிட்டிருந்த காற்றாலைகள் குறித்தே இந்த வாக்குறுதியை அவர் வழங்கினார்.

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பாக ஆராயும் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 80 வது வருடாந்த கூட்டத் தொடரில் ஜனாதிபதி கலந்துகொண்டிருந்த வேளையில் மன்னாரில் பொலிசார் இத்தகைய நடவடிக்கையை மேற்கொண்டது கவலைக்குரியது. நாடு திரும்பிய ஜனாதிபதி திசநாயக்க இந்த பிரச்சினையில் தலையிட்டு, முன்னர் உறுதியளித்ததன் பிரகாரம் பேச்சு வார்த்தையின் ஊடாக பரஸ்பரம் ஏற்புடைய தீர்வொன்றைக் காண்பதில் நாட்டம் காட்ட வேண்டும்.

உள்நாட்டுக் கம்பனி ஒன்று உத்தேசிக்கும் தற்போதைய திட்டம் அதானி குழுமத்தினால் உத்தேசிக்கப்பட்ட நேரடி வெளிநாட்டு முதலீட்டு திட்டத்தின் ஒரு தொடர்ச்சியாகும். ஆனால், சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான அக்கறைகள் மாறிவிடவில்லை.

கடல் மட்டத்திற்கு வெகுவாக கீழே இருக்கும் மன்னார் தீவொன்றில் நீர்நிலைகள் உப்பு படிவுகள் ஏற்படுதல், வெள்ள அபாயம் மற்றும் வாழ்வாதாரங்களுக்கு சேதம் தொடர்பில் மக்கள் கவலை கொண்டிருக்கிறார்கள். அவுஸ்திரேலிய கம்பனி ஒன்றினால் முன்னெடுக்கப்பட விருப்பதாக கூறப்படும் கனிம மண் அகழ்வு திட்டம் தொடர்பிலும் இதே போன்ற அக்கறை அச்சங்கள் வெளியிடப்பட்டன.

மின்சார ஆற்றலை மேம்படுத்துவதற்கான அரசாங்கத்தின் நோக்கத்தையும் சர்வதேச கடன்களை திருப்பிச் செலுத்துவதற்கு வெளிநாட்டு செலாவணியை சம்பாதிப்பதில் அதற்கு இருக்கும் அக்கறையையும் தேசிய சமாதானப் பேரவை புரிந்துகொள்கிறது. ஆனால், முன்னாள் போர் வலயமான மன்னாரில் மக்களின் இன, மத உணர்வுகள் மதிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

சட்டம், ஒழுங்கை பேணவேண்டியது பொலிசாரின் கடமை. ஆனால், அமைதி வழியில் எதிர்ப்பை வெளிப்படுத்தியவர்களுக்கு எதிராக பலாத்காரத்தைப் பயன்படுத்துவது பிரச்சினையை மேலும் தீவிரப்படுத்தக்கூடிய ஆபத்தைக் கொண்டிருக்கிறது. பதற்றநிலையை தணிக்கக்கூடியதாகவும் நேர்மையான வழிகாட்டலை வழங்கக் கூடியதாகவும் பொலிசாரின் எதிர்கால நடவடிக்கைகள் அமையவேண்டும். தபால் ஊழியர்கள் மற்றும் மினசாரசபை ஊழியர்கள் போன்ற வேலைநிறுத்தப் போராட்டங்களை முன்னெடுக்கின்ற குழுக்களுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை நடத்தி தீர்வுகளை எட்டியிருக்கிறது. அதேபோன்ற அணுகுமுறை மன்னாரிலும் பிரயோகிக்கப்பட வேண்டும். - என்றார்.

(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். சிலர் உங்களை நம்பி பெரிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். புது ஏஜென்சி எடுப்பீர்கள். வியாபாரம் தழைக்கும். சாதிக்கும் நாள்.

**இடபம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். மனசாட்சிபடி செயல்படும் நாள்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் தொடங்குவதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த பணம் தாமதமாக வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் அளவாக பழகுங்கள்.

**கடகம்**
கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். தாய்வழியில் மதிக்கப்படுவீர்கள். வியாபாரத்தில் புது வேலையாட்கள் அமைவார்கள். உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும்.

**சிம்மம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. பழைய உறவினர் நண்பர்களை சந்தித்து மகிழ்வீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் பற்று வரவு உயரும். தொட்டது துலங்கும் நாள்.

**கன்னி**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். கனவு நனவாகும் நாள்.

**துலாம்**
தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். அரசு அதிகாரிகளின் உதவியால் சில காரியங்களை முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். எதிர்ப்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**விருச்சிகம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு. உத்தியோகத்தில் சிலநுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள்.

**தனுசு**
இதுவரை இருந்த கோபம், டென்ஷன் நீங்கி எதிலும் ஒரு தெளிவு பிறக்கும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் ஆதாயமுண்டு. நன்மை நடக்கும் நாள்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில வேலைகளை நீங்களே முடிப்பது நல்லது. அடுத்தவர்கள் மனசு காயப்படும் படி பேசாதீர்கள். தர்மசங்கடமான சூழல்களை சமாளிக்க வேண்டிய நாள்.

**கும்பம்**
திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிப்பீர்கள். பிள்ளைகள் பிடிவாதமாக இருப்பார்கள். வியாபாரத்தில் வேலையாட்களின் விவாதம் வேண்டாம். பிரச்னைகள் வரக்கூடும். நிதானம் தேவைப்படும்.

**மீனம்**
எதிலும் வெற்றி பெறுவீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையைப் பெறுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள்.

# போதைப்பொருளுக்கு அடிமையாவோருக்கு புனர்வாழ்வு நிலையங்கள் அமைக்கப்படும்

யாழ்ப்பாணம், ஒக். 04

வடக்கு மாகாணத்தில் உயிர்கொல்லி போதைப்பொருளுக்கு அடிமையாவோருக்கு புனர்வாழ்வு வழங்கும் வகையில் புனர்வாழ்வு நிலையம் அமைத்தல் மற்றும் உதவிநாடும் நிலையம் அமைத்தல் தொடர்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தலைமையில் மீளாய்வு கூட்டம் ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் பணிப்பாளர் நாயகத்தின் பங்கேற்புடன் கடந்த ஜூலை மாதம் ஆளுநர் செயலகத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது. இதன்போது ஆராயப்பட்ட விடயங்களின் முன்னேற்றம் தொடர்பில் நேற்று முன்தினம் விரிவாக ஆராயப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் குருநகரிலும் முல்லைத்தீவில் ஒட்டுசுட்டானிலும் மன்னாரில் முருங்கனிலும் உள்ள மருத்துவமனைகளில் உதவிநாடும் நிலையங்கள் அமைப்பதற்குத் தீர்மானிக்



கப்பட்டிருந்தது. குருநகர் மருத்துவமனையின் திருத்த வேலைகள் நிறைவுறுவதற்கு கால அவகாசம் தேவை என்பதால், அதுவரையில் பிறிதொரு மருத்துவமனையில் உதவிநாடும் நிலையம் அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஒட்டுசுட்டான் மற்றும் முருங்கன் மருத்துவமனைகள் தயார் நிலையில் உள்ளமையால் அவற்றில் உடனடியாக உதவிநாடும் நிலையங்களை ஆரம்பிப்பதற்கு ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

புனர்வாழ்வு நிலையத்தை நிரந்தரமாக அமைப்பதற்கு யாழ்ப்பாணம் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் காணி ஒதுக்கப்பட்டு இது தொடர்பான கடிதம் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம. பிரதீபன் குறிப்பிட்டார்.

புனர்வாழ்வு நிலையம் நிரந்தரமாக அமைக்கப்படும் வரையில் கிளிநொச்சி கிருஷ்ணபுரத்தில் அல்லது முல்லைத்தீவில் இயக்குவது தொடர்பில் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், அங்குள்ள கட்டடங்கள் தொடர்பில் முழுமையான ஆய்வை மேற்கொள்வதற்காக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் குழுவினரும் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழான குழுவினரும் இணைந்து விரைந்து களப்பயணம் மேற்கொள்வது என்றும் இந்த ஆண்டு இறுதிக்குள் ஏதாவது ஓரிடத்தில் புனர்வாழ்வு நிலையத்தை ஆரம்பிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது. (எ-05)

# பருத்தித்துறையில் வீடுகள் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 04

பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினரின் நிதிப் பங்களிப்பில் அமைக்கப்பட்ட இரண்டு வீடுகள் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டன.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் ஒரு மில்லியன் ரூபாய் நிதிப் பங்களிப்பில் துன்னாலை வடக்கு மற்றும் புலோலி மந்திகைப் பகுதிகளில் அமைக்கப்பட்ட வீடுகளே இவ்வாறு திறந்து வைக்கப்பட்டன. இவ் விழாவில் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலாளர் ந. திருலிங்கநாதன், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (எ-03)



# கைதடியில் புதிய அஞ்சல் அலுவலகத்துக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம், ஒக். 04

யாழ்ப்பாணம் - கைதடியில் புதிய அஞ்சல் அலுவலகம் அமைப்பதற்கான அடிக்கல் நேற்று முன்தினம் நாட்டி வைக்கப்பட்டது.

28 மில்லியன் ரூபாய் செலவில் இந்த புதிய அஞ்சல் அலுவலகத்துக்கான கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பாராளுமன்ற உறுப்பினர் கருணைநாதன் இளங்குமரன், அஞ்சல் மா அதிபர், தென்மராட்சி பிரதேச செயலாளர் ஆகியோர் புதிய கட்டடத்துக்கான அடிக்கற்களை நாட்டி வைத்தனர். (எ)

# நவாலியில் வெடிபொருட்கள் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக். 04

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நவாலி வடக்கு நாச்சிமார் கோவில் வீதியில் உள்ள காணி ஒன்றிலிருந்து பெருமளவு வெடிபொருட்கள் நேற்று முன்தினம் இரவு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

காணி ஒன்றை பண்படுத்திய போதே இவ்வாறு வெடிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்தத் தகவல் மானிப்பாய் பொலிஸாருக்கு வழங்கப்பட்



டதை அடுத்து மானிப்பாய் பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் குறித்த காணியில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டனர்.

மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தின் அனுமதியுடன் குறித்த வெடிபொருட்கள் விசேட அதிரடிப் படையினரால் அகற்றப்படவுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-03-05)

# போதை மாத்திரைகளாக சில வலி நிவாரணிகள்!

## கண்காணிப்பை இறுக்க பணிப்புரை

யாழ்ப்பாணம், ஒக். 04

சில வலி நிவாரணிகளை உயிர்கொல்லி போதை மாத்திரைகளாகப் பயன்படுத்துவது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தலைமையில் ஆராயப்பட்டது. மொத்த விற்பனையாளர்கள் மற்றும் சில்லறை விற்பனையாளர்களிடம் கண்காணிப்பை இறுக்குவது தொடர்பில் யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் முன்னேற்றகரமான நிலைமை காணப்படுவதால் வடக்கின் ஏனைய 4 மாவட்டங்களிலும் இதே நடைமுறையைப் பின்பற்றுவதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு ஆளுநர் அறிவுறுத்தினார். (எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு எரிசக்தி

## அமைச்சர்கள் குழு கலந்துரையாடல்

கொழும்பு, ஒக். 04

**இலங்கையிலிருந்து இந்தியாவுக்கான எரிசக்தி ஏற்றுமதி குறித்து அந்த நாட்டின் அமைச்சர்களுடன் எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி கலந்துரையாடியுள்ளார்.**

இந்தியா சென்றுள்ள எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி அந்த நாட்டின் எரிசக்தி அமைச்சர் மனோகர் லால், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சர் பிரகலாத் ஜோஷி ஆகியோரை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது, மின்சார கட்டமைப்பு இணைப்பு, இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு எரிசக்தி ஏற்றுமதி செய்வதற்கான சாத்தியக்கூறுகள் போன்ற இருதரப்பு திட்டங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.



(ஐ)

# வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாத அரசாங்கம்

## ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, ஒக். 04

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் கர்தினால் உட்பட முழு கத்தோலிக்க மக்களையும் ஏமாற்றியுள்ள அரசாங்கம், இன்று றக்பி வீரர் வசீம் தாஜூதீன் விவகாரத்திலும் அவ்வாறே செயல்பட்டுள்ளது. வழங்கிய எந்தவொரு வாக்குறுதியையும் அரசாங்கத்தால் நிறைவேற்ற முடியாமல் போயுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் பணிமனையில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் கர்தினால் உட்பட முழு கத்தோலிக்க மக்களையும் ஏமாற்றியுள்ள அரசாங்கம் இன்று, விசாரணைகளை நிறைவு செய்வது இலகுவானதல்ல எனக் குறிப்பிடுகின்றது. இதேவேளை வசீம் தாஜூதீன் கொலை தொடர்பான பழியை ஓரிரு மாதங்களுக்கு முன்னர் சுட்டுக் கொல்லப்பட்ட கஜ்ஜா என்ற நபர்மீது சுமத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கஜ்ஜாவின்மகன் ஊடக சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்து மேலும் பல முக்கிய விடயங்களைத் தெரிவித்திருக்கின்றார்.

தாஜூதீன் விவகாரத்தை பொலிஸ் ஊடாக ஊடக பிரசாரத்தை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் முயற்சித்த போதிலும், தற்போது அந்த முயற்சி தோல்வியடைந்துள்ளது- என்றார். (ஐ)

# மாணவியின் ஒளிப்படத்தை எடிட் செய்த இளைஞர் கைது

கொழும்பு, ஒக். 04

மாணவி ஒருவரின் படத்தை நிர்வாண படமாக எடிட் செய்து வெளியிட்ட இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வடமேற்கு மாகாண கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அவரை கைது செய்தனர்.

19 வயது இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் மாணவியின் படத்தை சமூகவலைதளம் ஒன்றில் பதிவிட்டிருந்தார் என்புது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# விபத்தில் ஒருவர் பலி

கொழும்பு, ஒக். 04

வீதியை விட்டு விலகிய வான் மரத்துடன் மோதிய விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். ஐவர் காயமடைந்துள்ளனர்.

மொனராகலை - தனமல்வில - வெல்லவாய வீதியில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

அவிசாவளையில் உள்ள ஆடை நிறுவனம் ஒன்றில் வேலை நிறைவடைந்த பின்னர் தொழிலாளரை ஏற்றிச் சென்ற வாகனமே இவ்வாறு விபத்துக்கு உள்ளானது.

இதில், தம்புள்ளை பகுதியை சேர்ந்த 56 வயது நபரே உயிரிழந்தார். 18 வயதான வான் சாரதி உட்பட நால்வர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சாரதிக்கு ஏற்பட்ட நித்திரை கலக்கமே விபத்துக்குக் காரணம் என்று தெரிய வந்துள்ளது. (ஐ)

# தங்காலை போதைப்பொருட்கள் இதுவரை 7 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, ஒக். 04

தங்காலையில் ஐஸ், ஹெரோயின் போதைப்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பில் இதுவரை ஏழு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த செப்ரெம்பர் 22ஆம் திகதி தங்காலை - சீனிமோதரவில் இரு சடலங்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டன. விசாரணைகளில் காணி ஒன்றில் இரு லொறிகளில் போதைப்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இதைத் தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணைகளில் நேற்று முன்தினம் வரை சிறுவன் ஒருவன் உட்பட 5 சந்கேநபர்கள் கைது செய்யப்பட்டனர். சிறுவன் தவிர, ஏனையோர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், அந்தப் போதைப்பொருளை கரைக்கு கொண்டு வந்த படகின் உரிமையாளர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார். கைதானவர் 50 வயதுடைய தேவேந்திரமுனையை சேர்ந்தவராவார். இதே நேரம், சி. ஐ. டி. விசாரணையில் 54 வயதான மற்றொரு நபரும் இந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இருவரும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில், அவர்களை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# தடுத்து வைக்கப்படும் சிறார் எண்ணிக்கை குறைவடைந்தது

கொழும்பு, ஒக். 04

சிறுவர் தடுப்பு மையங்களில் உள்ள சிறுவர்களின் எண்ணிக்கை தற்போது குறைவடைந்துள்ளது என்று நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனினும், மேல் மாகாணத்தில் அதிகளவான சிறுவர்கள் நன்னடத்தை நிலையங்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்று அந்தத் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணத்தில், அதிகளவான சிறுவர் பராமரிப்பு மையங்கள் உள்ளதனால் அங்கு அதிகளவான சிறுவர்கள் உள்ளனர். தற்போது சுமார் 9 ஆயிரம் சிறுவர்கள் தடுப்பு மையங்களில் பராமரிக்கப்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# வீதியில் கைவிடப்பட்ட பெண் குழந்தை மீட்பு!

கொழும்பு, ஒக். 04

குடும்ப நல சுகாதார ஊழியர் ஒருவரின் வீட்டின் முன்பாக ஒரு மாத பெண் குழந்தை கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டது.

குருநாகல் - மஹவ - கொன்வேவ பகுதியில் நேற்று முன்தினம் இந்தக் குழந்தை மீட்கப்பட்டது.

குடும்பநல சுகாதார உத்தியோகத்தர் இந்திராணி அனுலாவின் வீட்டின் முன்பாக திறந்த வெளியில் ஒரு நாற்காலியில் இந்த பெண் குழந்தை கைவிடப்பட்டிருந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட குழந்தை நிகவெரட்டிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளது. மஹவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)

# கடவுச்சீட்டை பெற மோசடி செய்த இலங்கையர் மலேசியாவில் கைது

கோலாலம்பூர், ஒக். 04

மலேசிய கடவுச்சீட்டை பெறுவதற்காக அந்த நாட்டு சிறுவன் ஒருவனின் அடையாளத்தை பயன்படுத்திய, இலங்கையர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அத்துடன், அவர் மலேசிய கடவுச்சீட்டை பெற உதவிய மலேசிய பெண்ணும் கைது செய்யப்பட்டுள்ளார்.

தலைநகர் கோலாலம்பூர், குடிவரவு - குடியகல்வு பணிமனையில் இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

முதன் முறையாக, கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் 10 வயதான குறித்த பெண்ணின் மகனுடைய சான்றிதழ்கள் குடிவரவு அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இதன்போது, அந்த சிறுவனின் தந்தையாக அங்கு சென்றிருந்த இலங்கையரின் தோற்றத்தைக் கண்டு சந்தேகம் கொண்டு அவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளில் அவர் இலங்கையர் என்பதை கண்டறிந்தனர்.

10 வயதான சிறுவனுக்கு கடவுச்சீட்டை பெற்று அதனூடாக அந்த சிறுவனின் தந்தையென தம்மை அடையாளப்படுத்திய பின்னர் தமக்கான மலேசிய கடவுச்சீட்டை பெற்றுக்கொள்வதே இலங்கையரின் நோக்கம் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

(ஐ)

# இலகுபடுத்தப்பட்ட பெறுமதிசேர் வரியை இரத்து செய்ய வேண்டாம்

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 04

இலங்கை ஏற்றுமதிகளுக்கான, இலகுபடுத்தப்பட்ட பெறுமதிசேர் வரியை இரத்துச் செய்ய வேண்டாம் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளை நேற்று முன்தினம் சந்தித்தபோதே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

சஜித் பிரேமதாஸ, சர்வதேச நாணய நிதிய குழுவின் தலைவர், இவான் பாபகேர்ஜியோ மற்றும் வதிவிட பிரதிநிதி மார்த்தா வேர்ல்ட் மைக்கலை நேற்று கொழும்பில் சந்தித்தார்.

இதன்போது, இலகுபடுத்தப்பட்ட பெறுமதிசேர் வரி இரத்துச் செய்யப்பட்டால் இலங்கை ஏற்றுமதியாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று சுட்டிக்காட்டிய அவர், தனது கோரிக்கையை பரிசீலிக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

(ஐ)

# அதிக சுற்றுலாவிகள் செப்ரெம்பரில் வருகை

கொழும்பு, ஒக். 04

கடந்த செப்ரெம்பரில் நாட்டுக்கு வருகை தந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2018 ஆம் ஆண்டில் பதிவான முந்தைய சாதனையை முறியடித்து இதுவரை இல்லாத அளவுக்கு உயர்ந்த நிலையை எட்டியுள்ளது.

சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் கூற்றுப்படி, 2025 செப்ரெம்பரில் இலங்கைக்கு மொத்தம் ஒரு இலட்சத்து 58 ஆயிரத்து 971 சுற்றுலா பயணிகள் வந்துள்ளனர்.

இந்த எண்ணிக்கை 2018 ஆம் ஆண்டில் ஒரு இலட்சத்து 49 ஆயிரத்து 87ஐ விட அதிகமாகும். கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 30.2 சதவீதம் அதிகமாகும்.

இதேவேளை, இந்த ஆண்டில் 17 இலட்சத்து 25 ஆயிரத்து 494 சுற்றுலா பயணிகளின் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுமி வன்புணர்வு: குற்றவாளிக்கு 32 வருடம் கடூழிய சிறை தண்டனை

திருகோணமலை, ஒக். 04

திருகோணமலை - சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 16 வயது சிறுமியை வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து வன்புணர்வுக்குட்படுத்திய குற்றவாளிக்கு 32 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி அப்துல்லாஹ் நேற்று முன்தினம் இவ்வாறு தீர்ப்பு வழங்கினார்.

கடந்த 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதியிலும் 2022 பெப்ரவரி மாதத்திலும் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து 16 வயது சிறுமியை பாலியல் வன்புணர்வு செய்ததாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. குறித்த வழக்கு தொடர்பில் சட்டமா அதிபரால் ஐந்து குற்றச்சாட்டுகள் அடங்கிய குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இதனடிப்படையில் சேருநுவர - தெஹிவத்தை பகுதியைச் சேர்ந்த ரன்கொத் பேடிகே உதார பெதும் என்ற நபர் தொடர்பில் ஐந்து குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்த நிலையில் ஐந்து குற்றச்சாட்டுகளும் வழக்கு விசாரணையின்போது உறுதி செய்யப்பட்டது.

குறித்த வழக்கில் திருகோணமலை மேல் நீதிமன்ற அரச சட்டவாதி தர்ஷிகா திருக்குமாரநாதன் ஆஜராகி இருந்தார். இதே வேளை குறித்த வழக்கின் தீர்ப்பை திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி அப்துல்லாஹ் திறந்த நீதிமன்றில் வாசித்துக் காட்டியதுடன் மொத்தமாக 8 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் செலுத்துமாறும், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 60 ஆயிரம் ரூபாய் செலுத்த வேண்டும். இல்லையேல் மேலும் இரண்டு வருடங்கள் சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார். (எ)

# மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்து ஓய்வு பெற்ற ஆசிரியர் உயிரிழப்பு

சம்மாந்துறை, ஒக். 04

மோட்டார் சைக்கிள்கள் இரண்டு ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளான சம்பவத்தில் படுகாயமடைந்து சம்மாந்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தவர் இரண்டு நாட்களின் பின்னர் உயிரிழந்தார்.

இவ்வாறு, சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்தவர் சம்மாந்துறை பகுதியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஆங்கில பாட ஆசிரியரான 61 வயதுடைய உதுமாலெப்பை முகம்மட் அன்பர் என்பவராவார்.

கடந்த திங்கட்கிழமை மாலை அம்பாறை, சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்முனை அம்பாறை பிரதான வீதியில் அமைந்துள்ள குவாசி நீதிமன்றத்துக்கு அருகில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்துச் சம்பவம் இடம் பெற்றிருந்தது. (எ)

# “ஒஸ்கார்” அமைப்பால் கற்றலுக்கான உதவிகள்



கல்முனை, ஒக். 04

சர்வதேச சிறுவர் தினத்தில் அவுஸ்திரேலிய காரைதீவு மக்கள் ஒன்றியம் (ஒஸ்கார்) சம்மாந்துறை கல்வி வலயத்திலுள்ள மிகவும் பின்தங்கிய நாவிதன்வெளி அன்னமலை குடியிருப்புமுனை சண்முகா பாடசாலை மாணவர்களுக்கு ஒரு தொகுதி கற்றல் உபகரணங்களையும் ஒலிபெருக்கி சாதனத்தையும் வழங்கியது.

“ஒஸ்கார்” அமைப்பின் தலைவர் கந்தசாமி பத்மநாதனின் வழிநடத்தலில் உபதலைவர் அ. மகேந்திரன் ஒழுங்கமைப்பில் இந்த நிகழ்வு நடைபெற்றது. “ஒஸ்கார்” அமைப்பின் ஆரம்பகால உறுப்பினர் சோ. பாலச்சந்திரன் இந்தத் திட்டத்துக்கு பூரண நிதியுதவி வழங்கியிருந்தார்.

குடியிருப்புமுனை சண்முகா பாடசாலையில் நேற்று வெள்ளிக்கிழமை அதிபர் பி. யோகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் செ. மகேந்திரகுமார் கலந்து கொண்டார். (எ-08)

# வள்ளலாரின் அவதார தின விழா

கல்முனை, ஒக். 04

அருட்பிரகாச வள்ளலாரின் அவதார நாளான நாளை ஞாயிற்றுக்கிழமை பாண்டிருப்பு வள்ளலார் வல்லவர் உள்ளொளி நேசிப்பு மைய ஏற்பாட்டில் விசேட ஆன்மீக நிகழ்வுகள் காலை 09.00 மணி முதல் பாண்டிருப்பில் உள்ள வள்ளலார் வல்லவர் உள்ளொளி நேசிப்பு மையத்தில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுகளில் அருட்பெருஞ்ஜோதி கீதம் இசைத்தல், ஜோதிசுடர் ஏற்றுதல், தியானம், யோகாசனம், வள்ளலாரின் போதனைகள் உள்ளிட்ட பல நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக வள்ளலார் வல்லவர் உள்ளொளி நேசிப்பு நிலை யத்தின் ஆன்மீக இணைப்பாளர் ந. சௌவியதாசன் தெரிவித்தார். (எ-08)





மட்டக்களப்பு - விளாவட்டவான் அருள்மிகு சிறீ வீரமாகாளியம்மன் ஆலய வருடாந்த திருச்சடங்கு உற்சவ பெருவிழா பாற்குட பவனியுடன் ஆரம்பமானது.

# மாடுகள் திருடிய குற்றச்சாட்டில் காத்தான்குடியில் மூவர் கைது

காத்தான்குடி, ஒக். 04

மட்டக்களப்பில் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட ஒருவர் வாழ்வாதாரத்துக்காக வளர்த்து வந்த 3 பசு மாடுகளைத் திருடிச் சென்று அதில் 3 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஒரு பசு மாட்டை வெட்டி இறைச்சியாக்கிய சம்பவம் தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டனர். காத்தான்குடியைச் சேர்ந்த இறைச்சிக் கடை உரிமையாளர் மற்றும் பசுவை திருடிச் சென்று விற்பனை செய்த அதே பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞன் உட்பட இருவரை புதன்கிழமை இரவு கைது செய்ததுடன் இரு மாடுகளை உயிருடன் மீட்டுள்ளதாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை கரடியனாறு பொலிஸ் பிரிவில் கடந்த மாதம் மட்டும் 25 மாடுகள் காணாமல் போயுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# பாசிக்குடாவில் தீப்பரவல்

மட்டக்களப்பு, ஒக். 04

மட்டக்களப்பு, பாசிக்குடா தனியார் சுற்றுலா விடுதி ஒன்றுக்கு அருகில் உள்ள தென்னந்தோட்டமொன்றில் தீ பரவிய சம்பவம் கடந்த புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கோறளைப்பற்று - வாழைச்சேனை பிரதேச சபை தவிசாளர் சுந்தரலிங்கம் சுதாகரனின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.

உடனடியாக செயல்பட்ட தவிசாளர் வாழைச்சேனை, ஒட்டமாவடி பிரதேச சபையின் தண்ணீர் பௌசர்கள் மற்றும் மட்டக்களப்பு மாநகர சபையின் தீயணைக்கும் பிரிவை வரவழைத்து தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

இருந்த போதும் இந்தத் தீ சம்பவத்தில் பல தென்னை மரங்கள் தீயில் கருகி சேதமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான தீப்பரவல் சம்பவங்கள் பலமுறை வாழைச்சேனை பகுதியில் இடம்பெற்றுள்ளதாகவும் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண் டுவர 30 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள மட்டக்களப்பு மாநகர சபையின் உதவியை நாடி வருவதாகவும் தவிசாளர் குறிப்பிட்டார்.

வாழைச்சேனை பிரதேசத்துக்கு தீயணைப்பு இந்திரம் மிக முக்கிய மாக தேவைப்படுவதாகவும் அதனைப் பெற்றுக் கொள்ள சம்பந்தப் பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் தவிசாளர் தெரிவித்தார். (எ)

# அதிபரை இடமாற்ற கோரி மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு, ஒக். 04

மட்டக்களப்பு, பாலமீன்மடு விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் அதிபரை இடமாற்றுமாறும் கணிதம் மற்றும் விஞ்ஞான பாட ஆசிரியர்களை நியமிக்குமாறும் கோரி, மாணவர்கள் பாடசாலை முன் கதவை பூட்டி ஆசிரியர்கள் எவரையும் உட்செல்ல விடாது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த பாடசாலையில் 11ஆம் ஆண்டுக்கு கல்வி கற்பித்து வந்த ஆசிரியர் கடந்த 4 மாதங்களுக்கு முன்னர் இடமாற்றம் செய்யப்பட்டார். இதேவேளை, அதிபருக்கு ஆதரவாக இருக்கும் சிலரால் விஞ்ஞான பாடம் கற்பிக்கும் ஆசிரியருக்கு எதிராக குற்றச்சாட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து, அவர் கடந்த 4 தினங்களுக்கு முன்னர் வலயக் கல்வி அலுவலகத்துக்கு மாற்றப்பட்டார்.

இந்த நிலையில், குறித்த பாடங்களுக்கு கடந்த 4 மாதங்களாக ஆசிரியர் இல்லாதிருந்து வருகிறது. க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைக்கு இன்னும் 4 மாதங்கள் மட்டுமே இருக்கிறது. இது தொடர்பில் அதிபர் மற்றும் வலயக் கல்விப் பணிமனையின் கவனத்துக்கு கொண்டு வந்தும் இதுவரை ஒரு தீர்வும் இல்லை என்றும் மாணவர்கள் குற்றஞ்சாட்டினர்.

இந்த நிலையில் பாடசாலை அதிபரை இடமாற்றுமாறு ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் வலய கல்விப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமாக முறைப்பாடு செய்தனர். இதற்கு இதுவரை எந்தத் தீர்வும் கிடைக்கவில்லை. எனவே, உடனடியாக அதிபரை இடமாற்றம் செய்து குறித்த பாடங்களுக்கான ஆசிரியர்களை வலயக்கல்விப் பணிப்பாளர் நியமித்து தரும் வரைக்கும் பாடசாலை கதவை திறக்க முடியாது என மாணவர்கள் சுலோகங்கள் ஏந்தியவாறு நேற்று முன்தினம் காலை 07.00 மணி தொடக்கம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனித உரிமை...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே சிறீதரன் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்-

இலங்கை குறித்து, ஒரு நாட்டுக்கே உரிய சிறப்பு அறிக்கையாளர் நியமிக்கப்பட வேண்டும். இடைக்கால நீதி பொறிமுறை நடைமுறையின் ஒரு பகுதியாக, கடுமையான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களுக்கான சர்வதேச தடைகளும் விதிக்கப்பட வேண்டும்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சமாதானக் காலத்திலும் ஈழத் தமிழர்கள் வாழும் பகுதிகளில் இலங்கை இராணுவத்தின் தொடர்ச்சியான ஆக்கிரமிப்பு தொடர்பாக எனது, நீண்டகாலக் கவலையை வெளிப்படுத்த விரும்புகிறேன். தமிழர் பகுதிகளில் வாழும் மக்கள் இன்றும் மனித உரிமைகளை ஒடுக்கக் கூடிய பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கொடுமையான, விதிகளுக்குப் பலியாகி வருகின்றனர்.

தற்போது, செம்மணியில் உள்ள பொது கல்லறை குறித்து நடைபெற்று வந்த முக்கியமான நீதித்துறை விசாரணைக்கான நிதியை அரசாங்கம் நிறுத்தியுள்ளது.

சாட்சிகளின் மீதான அச்சுறுத்தல், பத்திரிகையாளர்கள் கைது போன்றவை இன்றும் தொடர்ச்சியாக நடைபெறுவதாக ஐக்கிய நாடுகள் நிறுவனம் உறுதிப்படுத்தியுள்ளன. கடந்த 2013ஆம் ஆண்டு தொடக்கம், ஒரு சுயாதீனமான, பன்னாட்டுத் தனித்துவமான விசாரணை அமைப்பை நிறுவ வேண்டும் என்று நான் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன்.

குறிப்பாக, 2009ஆம் ஆண்டு மே மாத இறுதி கட்டப்போரின்போது இடம்பெற்ற கொடூர குற்றச்செயல்களைப் பற்றிய சுதந்திரமான,

வெளிப்படையான மற்றும் நிபுணத்துவமான விசாரணைகள் நடைபெறுவது அவசியம். எனவே, இலங்கை குறித்து ஒரு நாட்டுக்கே உரிய சிறப்பு அறிக்கையாளர் நியமிக்கப்படவேண்டும். இந்நடவடிக்கையில் உறுதிப்பாடு இருக்க வேண்டுமெனில், பொதுமக்கள் நீதிக்கான அணுகலை, இழப்பீட்டை, மேலும் விசாரணைகளில் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் பங்கேற்கும் வாய்ப்பைப் பெறுதல் அவசியம். என்றார். (அ)

## யாழ்.தேவி...

ஈடுபடும் யாழ்தேவி தொடருந்து தாமதமாகும் என திணைக்களம் அறிவித்துள்ளது.

அதற்கமைய, கொழும்பு கோட்டையில் இருந்து காலை 6.40க்கு புறப்படும் குறித்த தொடருந்து, முற்பகல் 11.35 இற்கு வவுனியாவை சென்றடைவதுடன், வவுனியா தொடருந்து நிலையத்தில் சுமார் இரண்டு மணித்தியாலங்களும் 40 நிமிடங்களும் நிறுத்தி வைக்கப்படும்.

பின்னர் குறித்த தொடருந்து பிற்பகல் 2.15 இற்கு வவுனியாவிலிருந்து, காங்கேசன்துறை நோக்கி புறப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், யாழ்தேவி 4078 என்ற கடுகதி தொடருந்து குறித்த காலப் பகுதியில் 30 நிமிடங்கள் தாமதமாகி வழக்கமான நேரத்திற்கு பதிலாக முற்பகல் 11 மணிக்கு காங்கேசன்துறையில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கி தனது பயணத்தை ஆரம்பிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த காலப்பகுதியில் முன்பதிவுகளை இரத்து செய்ய விரும்பும் பயணிகளுக்கு பணத்தை திரும்ப பெற முடியும் என தொடருந்து திணைக்களம் அறிவித்துள்ளது. (அ)

## மாகாண சபை...

ஒரு வருடம் கடந்துவிட்டது. ஆட்சிக்கு வந்தபோது மக்கள் முன் பல வாக்குறுதிகளை அளித்தது. அதில் ஒன்று, இந்த நாட்டில் ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதாகும். ஒரு வருடத்திற்குள் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாகவும் உறுதியளித்தது. ஆனால் ஒரு வருடம் கடந்தும், இன்னும் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவில்லை.

அரசாங்கம் 12.3 இலட்சம் வாக்குகளை இழப்பதற்கான அச்சத்தின் காரணமாகவா தேர்தலை நடத்தவில்லை என்ற கேள்வி எழுகின்றது. இனப்பிரச்னைக்கு வழங்கப்பட்ட ஒரே தீர்வு மாகாண சபை அமைப்பேயாகும் வடக்கு மற்றும் கிழக்கில் மக்களின் வாக்குகள் கடைசி பொதுத் தேர்தலில் மட்டுமே இந்த அரசாங்கத்திற்க அதிக வாக்குகள் கிடைக்கப்பெற்றன. ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாஸாவே பெற்றார். அதனால் சட்டப்படி ஏற்றுக்கொள்ளப்பட்ட மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல், அதிகாரத்தை மையப்படுத்தும் நோக்கில் ஏமாற்றியுள்ள இந்த அரசாங்கத்திற்கு நாம் சவால் சவால் விடுக்க விரும்புகின்றோம். மாகாணசபைத்தேர்தல் உடனடியாக நடத்தப்பட வேண்டும். அந்த தேர்தலை எதிர்கொள்ள நாமும் ஏனைய எதிரணியினரும் தயாராகவே உள்ளோம்.

அத்துடன், ஜே.வி.பி மற்றும் என்.பி.பியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுர குமார திசாநாயக்க, கடந்த தேர்தலில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதாக கூறினர். 1994 ஜனாதிபதி தேர்தலில், சந்திரிகா குமாரதுங்க வேட்பாளராக இருந்த போது, ஜே.வி.பி-யின் நிஹால் கலப்பதியும் வேட்பாளராக இருந்தார். அப்போது ஜே.வி.பியும் சந்திரிகா குமாரதுங்கவும் ஒப்பந்தம் செய்தனர் - ஒரு ஆண்டுக்குள் ஜனாதிபதி முறை நீக்கப்படும் என்று. இன்று அவர்கள் 2/3 பெரும்பான்மை பெற்றுள்ளனர். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்கலாம். அதற்கு நாமும் வாக்களிப்போம். ஆனால் ஏன் இன்று அநுர குமார திஸாநாயக்க மௌனமாக உள்ளார்? அப்போது ஜே.ஆர். ஜெயவர் தனவை "கொலைகாரன்" என்று கூறி நாடெங்கும் போஸ்டர்கள் ஒட்டினீர் கள். ஆனால் இன்று ஜே.ஆர். அறிமுகப் படுத்திய அதே நிறைவேற்று ஜனாதிபதி அதிகாரத்தில் களிகூருகிறார்கள். அரசாங்கம் தன் வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும்-என்றார். (அ)

## இலங்கையின்....

பணிப்பாளர் ஜூலி கோசாக், இலங்கையின் பொருளாதார முன்னேற்றம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போது இந்த விடயத்தை தெளிபுபடுத்தினார்.

இலங்கை தொடர்பில் மேலும் பேசிய அவர்,

நாணய நிதியக் குழு தற்போது இலங்கையின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டின் ஐந்தாவது மதிப்பாய்வை நடத்தி வருவதால், இந்த உத்வேகம் தொடர்கிறது, இது நாட்டின் தொடர்ச்சியான நிலைப்படுத்தல் முயற்சிகளுக்கு ஒரு முக்கியமான படியாகும்.

2025 ஜூலை 1, அன்று நாணய நிதிய நிர்வாகக் குழு நான்காவது மதிப்பாய்வை முடித்தது. இது இலங்கையின் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் சீர்திருத்தங்களை ஆதரிக்க 350 மில்லியன் டொலரை வழங்கியது.

மேலும் இது நாணய நிதியத்திலிருந்து மொத்த நிதி உதவியை அமெரிக்க 1.74 பில்லியன் டொலரை கொண்டு வந்தது. இந்த ஆதரவு நாட்டின் சீர்திருத்தப் பாதை மற்றும் கட்டமைப்பு சரிசெய்தல்களில் நிதியத்தின் நம்பிக்கையை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

இலங்கையின் பொருளாதாரக் கண்ணோட்டம் குறிப்பிடத்தக்க வகையில் நம்பிக்கைக்குரியதாக உள்ளது. - என்றார். (அ)

## மாகாண...

ஊடகம் ஒன்றுக்கு கருத்துரைக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

கடந்த 2015 முதல் 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில், ஐக்கிய தேசிய முன்னணி தலைமையிலான அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட திருத்தத்தின் விளைவாக ஏற்பட்ட சட்ட சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. இதனால், மாகாண சபைத் தேர்தல் பல ஆண்டுகளாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டுமானால், தற்போதுள்ள சட்ட அமைப்பின் கீழ், ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள எல்லை நிர்ணய அறிக்கைக்கு அமைய, தேர்தலை நடத்த முடியுமா என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

இல்லையெனில், புதிய எல்லை நிர்ணயம் தேவைப்படும், அல்லது முன்னைய முறையின்படி தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார். (அ)

## அரசியல்...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அண்மைக் காலமாக தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் தொடர்பில் பல்வறு குழப்பங்கள் ஏற்பட்டு வருகின் றன.

இது தொடர்பில் தியாக தீபம் திலீபனுக்கு உதவியாகவும் அவருக்கு பின்னர் யாழ்ப்பாணம் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளராக இருந்த ராஜன் உள்ளிட்ட மூத்த போராளிகள் பலரும் என்னைத் தொடர்பு கொண்டு இது தொடர்பில் அரசியல் கலப்பற்ற ஒரு கட்டமைப்பை உருவாக்குமாறு கேட்டுக் கொண்டனர்.

1988ஆம் ஆண்டு என்னுடைய செலவிலேயே தியாக தீபம் திலீபனுக் கான தூபி "தியாக தீப தூபி" என்ற பெயரில் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. அந்த தூபி எழு வ ருடங்களுக்கு பின்னர் 1995ஆம் ஆண்டு உடைக்கப்பட்டது. அதன் காரணமாக நான் சுடப்பட்டு வேலை இழந்து இந்திய அமைதிப் படை பாதுகாப்பு, கைது எனத் தடுக்கப்பட்டு இந்தியாவுக்கு தப்பியோட வேண்டிய நிலை ஏற்பட்டது.

தற்போது தீபங்களுக்கு முன்பாக தலைகுனிந்து நிற்பவர்கள் தம்மை தியாகிகளாக நினைக்கின்றனர். இதில் யார் யார் இராணுவ புலனாய்வுடன் தொடர்பு கொண்டவர்கள் என்பது எனக்கு தெரியும்.

திலீபனுடன் தொடர்பைக் கொண்டவன். தூபியை திரும்ப நிறுவியவன் என்ற அடிப்படையில் எனக்கு அதை பற்றி தெரியும்.

யுத்தம் முடிந்த பிறகு முதன்முறையாக 2016ஆம் ஆண்டு தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தை துப்புரவாக்கி நினைவேந்தலை செய்யுமாறு ஜனநாயகப் போராளிகள் கட்சியை நான் வலியுறுத்தினேன். அதன்படி அது நடந்தது. 2017ஆம் ஆண்டில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸும் இணைந்து கொண்டனர்.

2018 இல் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் நினைவிடத்தில் கொட்டில் போட்டு ஆதிக்கம் செலுத்தியபோது மாவை சேனாதிராசாவை அழைத்து நான் சென்றபோது நாம் ஏளனமாக நடத்தப்பட்டோம்.

தற்போது உள்ளவர்கள் வரலாற்றை திரிபுபடுத்தக்கூடாது. திலீபன், எல்லோருக்கும் பொதுவானவன். அவன் கௌரவிக்கப்படவேண்டியவன். மதிப்பளிக்கப்படவேண்டியவன். போட்டி பொறாமையால் நினைவேந்தலை கொச்சைப்படுத்தக்கூடாது.

திலீபனின் தியாகத்தில் அரசியல் செய்யவேண்டாம். பொருத்தமான அரசியல் கலப்பற்ற கட்டமைப்பை உருவாக்கவேண்டும். ஒவ்வொரு நினைவேந்தலிலும் குழப்பம் ஏற்படுத்தப்படுகிறது. ஐந்து அல்லது ஏழு பேரை கொண்ட நினைவேந்தலுக்கான கட்டமைப்பை உருவாக்கி தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலை செய்யவேண்டும். இதற்கு மக்கள் ஏகோபித்த ஆதரவை வழங்க வேண்டும் - என்றார். (அ)

## கஜேந்திரகுமார்...

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனும் கலந்து கொண்டார். (அ)

## புதிய...

வேண்டும் என்பதில் எம்மிடம் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் இன்று நாட்டில் தலை விரித்து ஆடுகின்ற இந்த போதைப் பிசாசு குறித்தும், போதைப் பொருள் வியாபாரிகள் குறித்தும் மக்களுக்கு நன்றாக தெரியும். அந்தப் போதைப் பொருளுக்கு பின்னால் இன்னொரு போதைப்பொருள் உலகம், பாதாள உலகம், பாதாள அரசியல் மறைந்திருக்கிறது.

இவ்வாறான அரசியலை ஒடுக்குவதற்கு இவ்வாறான சட்டங்கள் தேவை. அதனால் புதிய சட்டம் ஒன்று வரும் வரைக்கும் ஒரு விடயத்தை நாங்கள் மீண்டும் சொல்கின்றோம், இந்தப் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை பயன்படுத்தி எந்த ஒரு அப்பாவிக் குடிமகன் மீதும் நாங்கள் கை வைக்கப் போவதில்லை.

நாட்டு மக்களது சொத்துக்களைச் சூறையாடியவர்களுக்கு எதிராகவே இந்த சட்டம் பாய்கின்றதே தவிர வேறு எதற்கும் பயன்படுத்தப்படாது. சுமந்திரனே, கடந்த காலத்தில் ரணிலுக்கு பின்னால் ஓடுனீர்கள், அவர்களுக்காக வழக்காடினீர்கள். ஆனால் அந்தக் காலத்தில் இந்த சட்டத்தை நீக்குவதற்கு எந்தவித முயற்சியும் எடுக்கவில்லை.

நாங்கள் வந்து ஒரு வருடத்தில் நாட்டைக் கட்டி எழுப்பதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுத்துள்ளோம். அந்த வகையில் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவோம் - என்றார். (அ)

## அர்ச்சுனா...

இளங்குமரன் தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு சில நாட்களுக்கு முன்பு சென்ற பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா, அங்கே சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெறுவதாகவும் அதற்கு ஆளும் கட்சியே துணை போவதாகவும் குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார்

இது தொடர்பாக வடமாட்சி கிழக்குக்கு நேற்று முன் தினம் விஜயம் செய்த பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரனிடம் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அனைத்து பகுதிகளிலும் இடம் பெறும் சட்டவிரோத தொழில்களை எவ்வாறு நிறுத்துவது என்பது எங்களுக்கு தெரியும். அதேவேளை பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா பாராளுமன்றத்தில் நட்பு ரீதியாக என்னுடன் பல விடயங்களை பகிர்ந்து கொண்டார்.

அதில் முக்கியமாக அவர் தெரிவித்த விடயம் என்னவென்றால் யூரியூப்பர்கள் என்னை வைத்து பணம் சம்பாதிக்கிறார்கள். அதனால் என்னை வைத்து பணம் சம்பாதிக்க நான் எவரையும் அனுமதிக்க மாட்டேன் ஆகவே நானே யூரியூப் செய்து நான் நல்ல வருமானத்தை பெற்றுக் கொள்கிறேன்.

ஆகவே அர்ச்சுனா இராமநாதனின் இலக்கு பணம் சம்பாதிப்பது. இன்று புலம்பெயர் மக்களை ஏமாற்றி அவர் 15 கோடி ரூபாவை சம்பாதித்திருக்கிறார். ஆனால் இப்போது பணம் கொடுத்த புலம்பெயர் தேச மக்களும் கொடுக்காத மக்களும் அர்ச்சுனாவை பற்றி உணர்ந்து விட்டார்கள்.

அதனால் அவர்களுடைய தொடர்பு இல்லாததால் தற்போது அச்சுனா நாமலை வைத்து ஐஸ்லாந்து ஜனாதிபதி நாமலின் தலைமையின் கீழ் சுகாதார அமைச்சராக இருந்து கொண்டு எவ்வாறு பணம் சம்பாதிப்பது என்று கற்பனை காண்கிறார். ஆகவே அர்ச்சுனா இராமநாதனும் விரைவில் சிறை செல்ல நேரிடும். - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# மருந்து பற்றாக்குறைக்கு ஓரிரு மாதங்களில் தீர்வு!

**சுகாதார அமைச்சர் நளிந்த**

கொழும்பு, ஒக்.04

**கடந்த வருடம் மருந்துகளுக்கான கேள்விப் பத்திரங்கள் முறையாக கோரப்படாதமையால் தற்போது சில மருந்துகளுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இந்த மருந்து பற்றாக்குறை இன்னும் ஓரிரு மாதங்களில் நிவர்த்தி செய்யப்படும் என்று சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.**



கண்டி தேசிய மருத்துவமனையில் நேற்று நடந்த நிகழ்வு ஒன்றில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், கடந்த வருடம் மருந்துகளுக்கான கேள்வி விண்ணப்ப நடைமுறைகள் உரிய அடிப்படையில் மேற்கொள்ளப்படவில்லை. இதனால், தற்போது சில மருந்து வகைகளுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

எனவே, அதற்கு மாற்று வழியாக அரச மருத்துவமனைகளில் மருந்துகளுக்கான தட்டுப்பாடு நிலவுகிறது. அத்தகைய மருந்துகளை தனியார் துறையிடமிருந்து கொள்வனவு செய்வதற்கு அரசு 35 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது.

நாட்டில் அரிசி, மா போன்ற பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டால் உடனடியாகக் கேள்வி மனுக்களை கோரி 2 அல்லது 3 வாரங்களில் அதனை கொண்டு வந்து சேர்க்க முடியும். ஆனால், மருந்துப் பொருட்களுக்கு அவ்வாறு செய்ய முடியாது. மருந்துக்கான விலை மனு கோரப்பட்ட பின்புதான் அந்நிறுவனங்கள் அவற்றை உற்பத்தி செய்ய ஆரம்பிக்கும்.

எனவே, சில மருந்துப் பொருட்களுக்கு கேள்வி மனுக்கோரி, அதனைப் பரிசீலித்து குறிப்பிட்டவர்களுக்கு வழங்கப்பட்ட பின்தான் அவர்கள் அதனைத் தயாரித்து பொதி செய்து அனுப்பி வைக்க நடவடிக்கை எடுப்பார்கள். சில நேரங்களில் ஒரு வருடகாலமும் செல்வதுண்டு. உணவு உற்பத்தி போன்றவை அப்படியல்ல. அறுவடை இயல்பாகவே முடிவடைந்து அவற்றை நுகர்வதற்கு வசதியளிக்கப்படுகிறது.

எனவே, எதிர்காலத்தில் மருந்துத் தட்டுப்பாடு ஏற்படாதிருக்க இப்போதிருந்தே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கடந்த காலத்தில் மருந்துகள் தொடர்பான கேள்விப்பத்திரம் முறையாக சமர்ப்பிக்கப்பட்டு ஓடர்கள் வழங்கப்பட்டிருந்தால், மருந்துகள் சரியான நேரத்தில் வந்திருக்க வேண்டும்.

அடுத்த ஆண்டுக்குத் தேவையான மருந்துகள் மற்றும் அறுவை சிகிச்சை உபகரணங்களுக்கான கேள்விப்பத்திர பணிகளில் சுமார் 80 வீதமானவை ஏற்கனவே நிறைவடைந்துள்ளன. இதன்படி கடந்த ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் ஆரம்பிக்கப்பட்ட திட்டத்தின் முடிவுகள் அடுத்த நவம்பர் மாதத்துக்குள் கிடைக்கும். எனவே, தற்போதுள்ள மருந்து பற்றாக்குறை இன்னும் ஒன்று அல்லது இரண்டு மாதங்களுக்குள் தீர்க்கப்படும். தற்போதைய மருந்து பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய பல்வேறு தீர்வுகள் முன்வைக்கப்பட்டுள்ளன - என்றார். (ஐ)

# ஓ. எல். பரீட்சை விண்ணப்பம் வரும் 9 வரையே ஏற்கப்படும்

கொழும்பு, ஒக். 04

க. பொ. த. சாதாரண தர பரீட்சைக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 9 ஆம் திகதி வரை மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கடந்த கடந்த மாதம் 18 ஆம் திகதி முதல் ஒன்லைன் மூலமே ஏற்றுக் கொள்ளப்பட்டன.

இதன்படி, எதிர்வரும் 9ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணியுடன் விண்ணப்பிக்கும் இறுதிநாளாளும். இதன் பின்னர், விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான கால அவகாசம் எந்த காரணங்களுக்காகவும் நீடிக்கப்படாது.

இது தொடர்பில் ஏதேனும் சந்தேகங்கள் இருப்பின், 011 278 4208, 011 278 4537, 011 278 5922 , 011 278 4422 ஆகிய தொலைபேசி இலக்ககங்கள் மூலம் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ)

# நாட்டுக்குள் போதைப்பொருட்கள் அரச அனுசரணையில் வருகின்றன

**விமல் வீரவன்ஸ தெரிவிப்பு**

கொழும்பு, ஒக். 04

அரச அனுசரணையிலேயே நாட்டுக்குள் போதைப்பொருட்கள் கொண்டு வரப்படுகின்றன. அரச அனுசரணையிலேயே அவை கைப்பற்றப்படுகின்றன என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள தனது கட்சி பணிமனையில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், தெற்கு மாகாணத்தில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் கைப்பற்றப்படும் போதைப்பொருட்கள் பிரதான பேசுபொருளாகக் காணப்படுகிறது. இந்த அரசாங்கத்தில்தான் 323 கொள்கலன்கள் எவ்விதமான பரிசோதனைகளுமின்றி விடுவிக்கப்பட்டன.



போதைப்பொருள் அடங்கிய இரண்டு கொள்கலன்கள் இலங்கைக்கு வருவதாக சர்வதேச புலனாய்வு பிரிவு அறிவித்தபோதும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. பொறுப்பற்ற வகையில் செயல்பட்டு விட்டு இன்று பிறர் மீது குற்றஞ் சாட்டுகிறார்கள்.

அரச அனுசரணையில்தான் போதைப்பொருட்கள் கொண்டு வரப்பட்டன. அரச அனுசரணையுடன்தான் போதைப்பொருட்கள் தற்போது கைப்பற்றப்படுகின்றன. கைப்பற்றப்படும் போதைப்பொருள் தொகைக்கும் தமக்கும் எவ்வித தொடர்புமில்லை என்று அரசாங்கத்தால் கூறமுடியாது.

மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினரான புவக்தண்டா என அறியப்பட்ட சனா என்ற போதைப் பொருள் வியாபாரி அண்மையில் கைது செய்யப்பட்டார். அவரை விடுவிப்பதற்கு அரசியல் தரப்பில் இருந்து கடும் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டது. இந்த சனாதான் படகு ஊடாக அம்பாந்தோட்டை பகுதிக்கு போதைப்பொருட்களை கொண்டு வந்துள்ளார். ஆகவே, பிறரை குற்றஞ்சாட்ட முன் தமது தரப்பின் குற்றச்சாட்டுகளை அரசாங்கம் ஆராய வேண்டும் - என்றார். (ஐ)

## 408 கிலோ பீடி இலை புத்தளத்தில் சிக்கியது

சிலாபம், ஒக். 04

வரி செலுத்தாமல் நாட்டுக்குள் சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட 408 கிலோ பீடி இலைகளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கற்பிட்டி விசேட அதிரடிப் படை பொலிஸார் இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

கற்பிட்டி - எரம்புகொடெல்லை பகுதியில் லொறி ஒன்றை மறித்து சோதனையிட்டபோதே இந்த பீடி இலைகள் கைப்பற்றப்பட்டன. இதன்போது, லொறியின் சாரதியான 28 வயது நபர் கைது செய்யப்பட்டார். அவர் புத்தளத்தை சேர்ந்தவராவார்.

கற்பிட்டி பொலிஸாரிடம் சந்தேகநபர் ஒப்படைக்கப்பட்டுள்ளார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## சட்டவிரோத தங்கத்துடன் சந்தேகநபர்கள் இருவர் கைது

கொழும்பு, ஒக். 04

சட்டவிரோத தங்கத்துடன் சந்தேக நபர்கள் இருவர் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

புத்தளம் - கற்பிட்டி - அரிச்சல் கடல் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட விசேட நடவடிக்கையிலேயே இந்தத் தங்கம் கைப்பற்றப்பட்டது.

சந்தேகநபர்களிடம் இருந்து 4 கிலோ 454 கிராம் தங்கம் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. குறித்த, தங்கத்தைக் கொண்டு செல்ல பயன்படுத்தப்பட்ட ஒரு சிறிய படகையும் கடற்படையினர் கைப்பற்றியுள்ளது.

மீன்பிடி வலைகளுக்கு பயன்படுத்தப்படும் ஈயம் என்ற போர்வையில் இந்தத் தங்கத்தை கொண்டு சென்ற போதே சந்தேகநபர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். (ஐ)

## இலங்கை மாணவிக்கு சிங்கப்பூரில் சிறை!

சிங்கப்பூர், ஒக். 04

இலங்கையைச் சேர்ந்த 22 வயது மாணவிக்கு சிங்கப்பூரில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூர் இராணுவத்தைச் சேர்ந்தவர் போன்று ஆள் மாறாட்டம் செய்து நிதி மோசடியில் ஈடுபட்டமைக்காக அவருக்கு 3 மாதங்கள் மற்றும் இரண்டு வார கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்தக் குற்றத்துக்காக அவருக்கு ஆயிரத்து 100 சிங்கப்பூர் டொலர் (நம் நாட்டு மதிப்பில் சுமார் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்) அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. அபராதத்தை செலுத்தத் தவறினால், அவர் மேலதிகமாக மூன்று நாட்கள் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனது வங்கிக் கணக்கின் உள்நுழைவு விவரங்களைத் தெரியாத நபருக்கு சட்டவிரோத நோக்கத்துக்காக வழங்கினார் என்று கணினி துஷ்பிரயோக சட்டத்தின் கீழ் அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

அந்த வங்கிக் கணக்கு கிட்டத்தட்ட 18 ஆயிரம் சிங்கப்பூர் டொலர் வருமானத்தை மோசடியாக ஈட்டப் பயன்படுத்தப்பட்டதாகக் கண்டறியப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பொலிஸ் அதிகாரியை கொல்ல முயன்றவருக்கு 15 ஆண்டு சிறை!

கொழும்பு, ஒக். 04

பொலிஸ் ஒருவரை வாகனத்தால் மோதி கொல்ல முயன்ற குற்றச்சாட்டில் ஒருவருக்கு 15 ஆண்டுகள் கடூழிய சிறை விதித்து தீர்ப்பளித்துள்ளது கொழும்பு மேல் நீதி மன்றம்.

போதைப்பொருள் கடத்தல்காரர் என்று அடையாளம் காணப்பட்ட குறித்த நபர் 17 ஆண்டுகளுக்கு முன்னர் தெகிவளையில் முன்னெடுக்கப்பட்ட போதைப்பொருள் தொடர்பான தேடுதல் நடவடிக்கையின்போது பொலிஸ் அதிகாரி ஒருவரை தனது வாகனத்தால் மோத முயன்றார்.

அந்த சம்பவம் தொடர்பிலேயே, குறித்த நபருக்கு 15 வருட கடூழியச் சிறை தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், குற்றவாளிக்கு 10 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.10.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org